(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES UNDER PREVENTION OF CORRUPTION ACT, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case Number | : | Spl.C.C.No.1/2015 |
| Deposition Of Witness for | : | PW19 |
| Name | : | **Thiru.Sankara Narayanan** |
| Father's Name | : | Thiru.Viswanathan |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **30th April 2026.**

(1, 2 எதிரிகள் முன்னிலையில்லை, அவர்கள் நீதிமன்றத்தில் முன்னிலையாவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. It is recorded as directed by the **Hon'ble High Court, Madras vide R.O.C.No.65929-A/2022/F1, P.Dis.No.17/2023 dt.23.01.2023.**)

சாட்சி ஆஜர். சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை** :

1. நான் தற்போது கோட்டயம் வருமான வரித்துறை அலுவலகத்தில் கூடுதல் ஆணையராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2010-ம் ஆண்டு முதல் காரைக்குடி வருமான வரித்துறை அலுவலகத்தில்

ANITHACHRISTY J
Digitally signed by ANITHACHRISTY J
Date: 2026.05.05 11:26:28 +0530

வருமான வரி அதிகாரியாக பணியாற்றி வந்தேன். மதுரை வருமான வரித்துறை ஆணையர் அலுவலகத்திற்கு 14.08.2012-ம் தேதியிட்ட சிவகங்கை, ஊ.த.க பிரிவு அலுவலகத்திலிருந்து புதுக்கோட்டை மாவட்டம், தோட்டக்லைத்துறை முன்னாள் உதவி இயக்குநர் திரு.K.சண்முக சுந்தரம் என்பவர் மீதான வழக்கு விசாரணையில் அவரது மனைவி திருமதி.பாக்கியலட்சுமி என்பவரின் கடந்த 1998-1999 முதல் 2005-2006 வரையிலான காலக்கட்டத்திற்குண்டான வருமான வரி அறிக்கை மற்றும் அதற்கான கணக்கு பட்டியல்களை மேற்படி வழக்கின் புலன் விசாரணை அதிகாரி அவர்களுக்கு அனுப்பி வைக்கும்படி கடிதம் வந்தது.

2. நான் அதன்படி திரு.சண்முகசுந்தரன் அவரது மனைவி பாக்கியலட்சுமி என்பவரது கணக்கீட்டு வருடம் கடந்த 1998-1999 முதல் 2005-2006 வரையிலான காலக்கட்டத்திற்குண்டான வருமான வரி அறிக்கை மற்றும் அதற்கான கணக்கு பட்டியல்களை எனது அலுவலக கடிதத்துடன் இணைத்து உண்மை நகல் என்று அலுவலக முத்திரையிட்டு, கையொப்பமிட்டு சிவகங்கை, ஊ.த.க பிரிவு அலுவலகத்திற்கு அனுப்பினேன். மேற்படி காலக்கட்டத்தில் 1998-1999 கணக்கு வருடத்தில் ரூ.1403/-ஐ கடந்த 29.10.2005-ல் பாரத ஸ்டேட் பாங்க், காரைக்குடியில் செலுத்தியுள்ளார்கள். வருமான வரி அறிக்கை

ANITHACHRISTY J
Digitally signed by ANITHACHRISTY J
Date: 2026.05.05 11:26:34 +0530

தாக்கல் செய்தது கடந்த 11.11.2005 அன்று வருமான வரித்துறை அலுவலகத்தில் செலுத்தியுள்ளார்கள்.

3. கடந்த 1999–2000 கணக்கு வருடத்தில் ரூ.718/–ஐ கடந்த 29.10.2005–ல் பாரத ஸ்டேட் பாங்க், காரைக்குடியில் செலுத்தியுள்ளார்கள். கடந்த 2000–2001 கணக்கு வருடத்தில் ரூ.1406/–ஐ கடந்த 29.10.2005–ல் பாரத ஸ்டேட் பாங்க், காரைக்குடியில் செலுத்தியுள்ளார்கள். கடந்த 2001–2002 கணக்கு வருடத்தில் ரூ.1184/–ஐ கடந்த 29.10.2005–ல் பாரத ஸ்டேட் பாங்க், காரைக்குடியில் செலுத்தியுள்ளார்கள். கடந்த 2002–2003 கணக்கு வருடத்தில் ரூ.1092/–ஐ கடந்த 29.10.2005–ல் பாரத ஸ்டேட் பாங்க், காரைக்குடியில் செலுத்தியுள்ளார்கள். கடந்த 2003–2004 கணக்கு வருடத்தில் ரூ.784/–ஐ கடந்த 29.10.2005–ல் பாரத ஸ்டேட் பாங்க், காரைக்குடியில் செலுத்தியுள்ளார்கள். மேற்படி காலக்கட்டத்திற்குரிய வருமான வரி அறிக்கையை உரிய காலத்தில் செலுத்தாமல் காலதாமதமாக செலுத்தப்பட்டதால் வருமான வரிச்சட்டத்தின்படி அது ஏற்கத்தக்கதல்ல.

4. கடந்த 2004–2005 கணக்கு வருடத்தில் ரூ.1020/–ஐ கடந்த 29.10.2005–ல் பாரத ஸ்டேட் பாங்க், காரைக்குடியில் செலுத்தியுள்ளார்கள். கடந்த 2005–2006 கணக்கு வருடத்தில் ரூ.825/–ஐ கடந்த 29.10.2005–ல் பாரத ஸ்டேட் பாங்க், காரைக்குடியில் செலுத்தியுள்ளார்கள்.

ANITHACHRISTY J
Digitally signed by ANITHACHRISTY J
Date: 2026.05.05 11:26:39 +0530

ஆக மொத்தம் ரூ.8432/—ஐ வருமான வரியாக திருமதி.பாக்கியலட்சுமி அவர்கள் பெயரில் செலுத்தப்பட்டுள்ளது. 1998—1999 முதல் 2003—2004 காலக்கட்டத்தில் திரு.ஏகாம்பரம் என்பவர் வருமான வரி அதிகாரியாக பணிபுரிந்தார். அவர் வருமான வரி அறிக்கையில் Lodged என்று குறிப்பு எழுதி சுருக்கொப்பம் செய்து வைத்துள்ளார். 2004—2005 மற்றும் 2005—2006 காலக்கட்டத்தில் மொத்தம் ரூ.1845/— வருமான வரியாக செலுத்தியுள்ளார். அது சட்டப்படி ஏற்புடையதாகும். மேற்படி **சண்முகசுந்தரம் அவர்களின் மனைவி பாக்கியலட்சுமி என்பவர் தொடர்பான வருமான வரி அறிக்கை மற்றும் அதற்கான கணக்கு பட்டியல் உள்ளடங்கிய கோப்பு அ.த.சா.ஆ.49**—ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கு தொடர்பாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள், தேதி ஞாபகமில்லை.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

என்னை லஞ்ச ஒழிப்பு துறை போலிசார் விசாரித்தார்களா என்றால் ஆமாம், தேதிதான் ஞாபகமில்லை. யார் என்னை வந்து விசாரித்தது என்றால் DSP மற்றும் காவல் ஆய்வாளர் வந்தார்கள், அதில் திரு.ராஜா, காவல் ஆய்வாளர் அவர்கள் என்னை விசாரித்தார். என்னை விசாரித்ததை எழுத்து மூலமாக எழுதிக்கொண்டார்களா என்றால் எனக்கு

ANITHACHRISTY J
Digitally signed by ANITHACHRISTY J
Date: 2026.05.05 11:26:44 +0530

ஞாபகமில்லை.  DSP மற்றும் காவல் ஆய்வாளர் என்னை எங்கு வைத்து விசாரணை செய்தார்கள் என்றால் காரைக்குடியில் உள்ள வருமானவரித்துறை அலுவலகத்தில் வைத்து விசாரணை செய்தார்கள். என்னை நேரடியாக அவர்கள் விசாரணை செய்யவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:** இல்லை.

"Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct"

ANITHACHRISTY J

Digitally signed by ANITHACHRISTY J
Date: 2026.05.05 11:26:50 +0530

**Special Judge,**
P.C.ACT Cases,
Sivagangai.